விவேகபாநு.

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றேயுலகு—திருக்குறள்.

வால்யூம் I] அக்டோபர்மீ 1-௳ [புத்தகம் 2

விதி அல்லது ஊழ்.

ஜகம் கானல் நீருக்குச் சமமாயிருக்கிறதென்று அத்வைதிகள் சொல்லுகிறார்கள். கானலிடத்து நீர் எப்படி எதார்த்தத்தில் இல்லையோ தோற்றமாத்திரையில் இருக்கின்றதோ அதுபோலவே சச்சிதானந்தமாய் விளங்கும் பிரமத்தினிடத்தில் உலகமும் தோற்றமாத்திரையாக இருக்கின்றதேயன்றி எதார்த்தத்தில இல்லையென்று அவர் சொல்லுவர். அதன் உண்மை எவ்வாறிருப்பினும் நமக்கு ஒரு விஷயம் பிரத்தியக்ஷ அனுபவமாகவேயிருக்கின்றது; அஃதாவது உலகத்தில் மாந்தர் சுகத்தையடையும்பொருட்டுப் பலவித முயற்சிகள் செய்கின்றனர். அவரவர்களுடைய முயற்சிக்குத்தக்கபடி பிரயோஜனமும் சித்திக்கின்றது. ஒருவன் தான் கருதிய பிரயோஜனத்தை முயற்சிவலியால் அடையப்பெற்றானாயினும் அத்துடன் திருப்தியடைந்தவனாகக் காணப்படுகின்றானில்லை. பின்னரும் அவனுடையபுத்தி வேறு எதையேனும் நாடுகிறதாகக்காண்கிறோம். திருஷ்டாந்தமாக, ஓர் மனிதன் தன்னுடைய குடும்பத்தை சம்ரக்ஷணை செய்யப்போதுமான வருமானமில்லாமல் வருந்துகின்றானென வைத்துக்கொள்வோம். அந்நிலையில் அவனுக்கு என்னதோன்றுகின்றது? "நமது குடும்பத்திற்கு மாதம் 20 ரூபாய் வேண்டியிருக்கின்றதே. இப்போது நமக்கு 15 ரூபாய்தானே வருகின்றது. இன்னும் 5 ரூபாய் அதிகமாக வருமானால் சுகமாகக்காலக்ஷேபம செய்யலாமே. அது எப்போது கிடைக்குமோ" என்று நினைக்கிறான். கடவுள் கிருபையால் அவன் எண்ணப்படி நிறைவேறுகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அவன் அதில் திருப்தியடைவதுண்டோ? ஒருக்காலும் இல்லை. அவனே இலக்ஷாதிபதியானானென்று வைத்துப்பார்ப்போம். அப்பொழுதேனும் அவன் சுகமாயிருப்பதுண்டோ? கிடையாது. பின்னென்ன நினைக்கின்றான்?

"ஆ! ஆ! 70000 ரூபாய் பெறுமான கிராமம் சொற்பமான விலைக்கு வந்திருக்கிறதே, 50000 ரூபாய் தானே விலைசொல்லுகிறான். இது நல்லதருணமாச்சுதே. கையில் பணமில்லையே' என்று வருத்தப்படுகிறான். இதுபோலவே உலகத்தில் அடையக்கூடிய சகல—சாதாரண ஜனங்கள் சொல்லுகிறபடி—சு—சாதனங்களையும் ஒருவன் அடைவானேயாயினும் அவனுக்குத் திருப்தியுண்டாவதில்லை. ஆனந்தாவது சுகம் லபிக்கிறதில்லை. பின்னும் பின்னும் அவனுடையபுத்தி அடைந்ததைவிட்டுத்தவிர வேறொன்றிலேயே செல்லுகின்றது. இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றில் சுகமிருப்பதாகத் தோன்றி அதனை அடைவதற்காக அவரவரால் இயன்றமட்டும் பிரயாசைப்பட்டுக் கடைசியாய் அதனையடைந்த பின்னர் அவற்றில் சுகமில்லையெனக்கண்டு, வெவ்வேறுபொருள்களை அவர் நாடிச்செல்கின்றமையால், உலகத்திலுள்ள விஷயங்களில் எதார்த்தமாய்ச் சுகமில்லை யென்பதும், கனவில் தோற்றல் மாத்திரையாக ஒன்றன்பின் ஒன்றாய் வரும் அலைகள்போல உலக விஷயங்கள் ஒன்றன்பின்னொன்றாய்ச் சுகம்போலத் தோன்றமாத்திரம் செய்கின்றனவென்பதும் வெளிப்படையாகின்றன.

உலகவிஷயங்களால் திருப்தியுண்டாகாமல் போகிறதைத்தவிர துக்கமும் உண்டாகின்றது. இவ்வுண்மையை அநேகர் கவனித்திருப்பதில்லையேனும் பலர்க்கு இது பிரத்தியக்ஷ அனுபவமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. பொருளல்லவற்றைப் பொருளென்றுமதித்து இவ்விதமாய் உலகவிஷயங்களில் உழன்று வருந்து மனிதன் ஒருவனை நோக்கி "ஆகாயமாய்க் கெட்டுப்போகின்றாயே. எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் உலகவிஷயங்களினின்றும் நித்திய சுகம் அடைந்தவர்களுண்டோ? தன்னையால் துக்கமேயொழிய வேறில்லை. ஆதலின் அவைகளின்மேல் இச்சைவைக்காமல் பகவானுடைய பாதாரவிந்தங்களை யடைந்துய்யும்படி பிரயத்தனப்படுவாயாக. அதற்குவேண்டி முயற்சி செய்வதே மனுஷ்யனுக்குரிய தொழிலாம்" என்று புண்ணியபுருஷர் யாரேனும் சொல்வாராயின, "நான் என்ன செய்யவேண்டும்? எனக்கு கல்வி சிறிதுமில்லை. விதியைக்கடக்க யாரால் முடியும்" என்று அவன் விடையளிக்கின்றான். உலகத்தில் மனிதர்கள் அநேகவார்த்தைகளை வாயினால் சொல்லிவிடுகின்றனர்; ஆனால் அவற்றின் பொருள்களை விசாரித்துணர்வதில்லை; அவ்விதம் உபயோகிக்கப்படும் பதங்களுள் விதியென்பதும் ஒன்றே. மேற்சொன்ன திருஷ்டாந்தத்தைத் தான் பார்ப்போம். "நான் என்ன செய்யவேண்டும்? எனக்கு கல்வியில்லையே" என்கின்றான். விதியானது நம் ஆகாயத்திலிருந்து தூக்கி தலைகீழாயில் விழப்போகும். இதற்கு

மாத்திரம் கல்வியில்லையென்று சொல்லுவதுபோல வெளிக்கு விளங்கித் திலும் அவன் அப்படியேயிருப்பானோ? அவைகளின்மாத்திரம் தனக்கு கல்வி நிலைகளிலிருப்பதுபோல் எண்ணி யாவர்க்கும் மூர்க்கனாகுவனே. இதென்னபேதமை!

விதி என்னும் பதத்திற்குப் பலபொருள்கள் உளவேனும் இவ்விடத்தில் ஊழ் என்றேபொருள் படும். ஊழ் என்பது ஏதேனும் ஒருபலனைக் கொடுப்பதற்கு ஏதுவாயுள்ள பூர்வகர்மம். கர்மம் என்றால்செய்கை தொழில் என்று பொருள்படும். அது மனம், வாக்கு, காயம், என்பவைகளால் செய்யப்படுவதொன்று. ஒருவன் தன்னுடைய திரிகரணங்களாலும் கர்மங்கள் செய்தாலுமினும் அவற்றுள் மனதினால்செய்யப்படுபவைகளே முக்கியமானவைகளாயும் சீக்கிரம் பலனைக்கொடுக்கக்கூடியவைகளாயுமிருக்கின்றன. ஏனெனில் மனமே மற்றகரணங்களுக்கெல்லாம் பிரதானமானதாயிருக்கின்றது. இது நிற்க. கர்மமானது வித்துக்குச் சமானமாயிருக்கின்றது. ஒருவன் தன்வயல்களில் வித்து விதைக்காமல் அவ்வளம் விளைவுறாக எதிர்பார்க்க முடியாதோ அங்ஙனமே முந்தின ஜென்மங்களில் கர்மம் செய்யாமல் இப்போது அவ்விதகர்மத்தினால் அடையும் பயனை எதிர்பார்க்கமுடியாது. அதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும்

"ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

என்று அருளிச்செய்திருக்கின்றனர். ஆதலின் ஊழ் அல்லது விதி என்பது சாதாரண ஜனங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறது போல எங்கேயோ இருந்து திடீரென வந்திறங்குவதொன்றல்ல வென்பதும் ஆனால் அவரவர் முந்தின ஜென்மங்களில் செய்த கர்மங்களே யாமென்பதும் விளக்கமாயின.

கர்மம் மூவகைப்படும். அவையாவன:—சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்பவைகளாம். அவற்றுள் சஞ்சிதம் அநாதிகாலம் தொட்டுவருகின்ற ஒவ்வொரு ஜென்மங்களிலும் செய்துள்ள கர்மங்களில் பலன் கொடுத்தவைகள் போகப் பாக்கியுள்ளவைகளாம். பிராரப்தமாவது பலன்கொடுக்கத்தக்கனவாயும் ஒருஜென்மத்திற் கேதுவாயிருப்பனவாயுமுள்ள கர்மங்களாம். ஆகாமியமாவது பிராரப்தம் அனுபவிக்குங்காலத்தில் புதிதாய்ச்செய்யும் கர்மங்களாம். இவற்றில் நாயனார் அருளிச்செய்திருக்கின்றது பிராரப்தமேயாம். யாவனேயாயினும் பிராரப்தத்தை அனுபவித்துத் தொலைக்கவேண்டுமேயன்றி அதைவிலக்கமுடியாது. ஊழ் என்பதற்கு பிராரப்தமென்று சொல்லினும் அமையும். சகலகர்மங்களையும் ஞானத்தினால் சுட்டெரித்த மெய்ஞ்ஞானிகளுக்கே பிராரப்தம்

அனுபவித்துத்தான் தீரவேண்டுமானால் மற்றவர்களுக்குக் கேள்ப்பானேன். பிராரப்தம் அனுபவித்துத்தான் தீரவேண்டுமென்றுசொன்னால் ஆகாமியம் சத்கர்மமாய் இருக்கப்படாதென்று பொருளா? 'இப்போது வந்திருக்கிற யாத்திரையில் கட்டமுது இல்லாமல் வந்திருக்கிறோம். ஆதலால் பசியால் வருந்துகிறோம்' என்று அறிந்தால் அடுத்த யாத்திரையில் பசியால் துன்புறாமலிருக்கக் கட்டமுது இப்போது தயார்செய்து கொள்வது அறிவீனமா? முந்தினபருவத்தில் விதைக்காததினிமித்தம் இப்போது நமது நிலம் தரிசாய்க்கிடக்குமானால் இப்பொழுது வந்திருக்கிற நல்ல பருவத்திலும் விதையாமலிருந்து பின்னர் ஆகாரத்திற்கு வாயைப்பிளந்து கொண்டிருப்பது தானா விவேகம்? ஜென்மம் எடுத்தவர்கள் ஊழை அனுபவித்துவிட்டு சும்மாவா போய்விடுகிறார்கள்? புதிய கர்மம் (ஆகாமியம்) சம்பாதித்துக்கொண்டு போகிறார்களல்லவோ? அது சத்கர்மமாயிருந்தாலாகாதா?

ஆதலின் ஒவ்வொருவரும் முந்தின ஜென்மங்களில் பகவானுடைய பாதாரவிந்தங்களை யடைதற்கவசியமான கர்மங்களைச் செய்யாததினால் இச்சென்மத்தில் அத்தகையமாட்சிமைபெற்ற கடவுட்பேறடைய ஏதுவில்லையாயினும் இப்போதாவது மேலோரிடத்தில் கேட்டு அதற்கு வேண்டிய கர்மங்களைச் செய்யவேண்டுவது அவசியமன்றோ? அதைவிட்டுச் சிலர் "எனக்கு விதியில்லையே விதியிருந்தால் கூட்டிவைக்கும்" என்று சொல்வது "விரைக்கிறகாலத்தில் ஊர்வழிபோனால் அறுக்கிற காலத்தில் ஆள்த்தேடவேண்டுவதில்லை" என்றபழமொழிக்கிணங்கவிருக்கின்றது.

ஆதலின் மாந்தர் நல்வழியிற் செல்வதற்கு மாத்திரம் விதிவரட்டுமென்று சொல்லி அல்வழியிற் செல்லவெனின், வித்தையும் எதிர்பாராமல் கச்சைகட்டி நிற்பது அழகன்று. மேலோர் யாரேனும் ஒருவனைச் சன்மார்க்கத்திற் செல்லும்படி உபதேசித்தால் "நாம் ஏதோபூர்வ ஜென்மத்தில் செய்த சத்கர்மத்தின் பலன்தான் நமக்கிவ்வாறு ஒருவர்சொல்வது; நமக்கு நல்லவிதி வந்துவிட்டதுபோலிருக்கிறது" என்றுநினைத்து, அவருடைய சொல்லைக் கடைப்பிடித்து, அவன் ஒழுகுவதைவிட்டு, "மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டாம்" என்று ஔவையார் உபதேசித்திருப்பதையு மறந்து, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலிய துர்க்குணங்களோடு கூடிய மனத்தின்பின் குதிரையின்வாலைப்பற்றி யதன்பின்தொடர்கின்ற அந்தகனைப்போன்று தன்னுடைய விவேகமென்னும் நேத்திரமும் கெட்டுச்செல்வானாயின், அவனுடையகதி அதோகதிதான் என்பதற்கையமென்னை? விதி, விதி, என்று சொல்லி இந்தச்சென்மம் முழுவதும் துஷ்கிருத்தியங்களை

செய்துகொண்டிருந்தால் அடுத்தஜென்மத்தில்தான் நல்லவிதியேது? இவையெல்லாம் நன்றாயாலோசித்து இந்தச்சென்மத்தில் சரீரம் அனுபவிக்கிற சகல சுகதுக்கங்களும் விதிவழிவருகின்றனவென்று அறிந்து அவைகளைப்பற்றி மனதில் கிஞ்சிற்றேனும் சுகதுக்கம் பாராட்டாமல் மனிதஜென்மம் எடுத்ததின் பிரயோஜனத்தை அடைய முயலுவதில் எல்லாரும் மிகுந்த சிரத்தையெடுப்பார்களாக. முந்தின ஜென்மங்களில் நாம் செய்தகர்மமே இப்போது விதியாகி நமக்குண்டாகிற சுகதுக்கத்திற்குக் காரணமாயிருக்கின்றதென்பது நமக்குப்பிரத்தியக்ஷமாதலின் இப்போது சன்மார்க்கத்தில் சிறிதேனும் பழகுவமேல் அதுவும பின்னிட்டு பலன்கொடுக்குமென்பதில் என்ன ஆக்ஷேபம்?

ஆதலால் ஒவ்வொருவரும் இனிமேலாகிலும் நல்லவிதியைச் சம்பாதிக்க இப்பொழுதே முயல்வாராக. அருமையான ஜென்மம் கிடைத்திருக்கின்றது.

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்".

V. O. சிதம்பரம்.

விவேக விசாரங்கள்.

ஓர் அரும்பானது புஷ்பிக்குங்கால் அதன் சுகந்தம் பக்கங்களிலெல்லாம் பரிமளிக்கின்றது. அதுபோன்ற மோக்ஷ இச்சையுடைய ஒருவன் ஞானியாகுங்காலத்து அவனுடைய சத்துவாசனையானது சுற்றெல்லாம் வியாபிக்கின்றது.

மனுஷிய சரீரம் என்னும் புணைபற்றிச் சம்சாரம் என்னும் சாகரத்தைக் கடக்க எத்தனிக்கும ஜீவர்களிற் பலர், காமம் என்னும் புயல்காற்றினால் தங்கள் மரக்கலம் மோதப்பட்டு, விஷயம் எனனும் பாறையில் தாக்கச் சிதைக்க, ஜெனமம் எனனும் மகரத்தால் விழுங்கப்படுகிறார்கள்.

ஓர் பாட்டையில் சென்றுகொண்டிருந்த பிரயாணி ஒருவன் வழியில் ஒரு முற்றின தேங்காய் கிடக்கக்கண்டான். அவன் அதைக்கையிலெடுத்துச் சுற்றிச் சுற்றிப்பார்த்து அதில் ஒன்றுமில்லையென்று நினைத்து அவ்விடத்திலேயே அதையெறிந்துவிட்டுப் போயினன். அவ்வழியே இரண்டாவது சென்ற ஒருவன் அதைப்புரட்டிப்பார்த்து அதில் ஏதேனும் புசிப்பதற்கேற்றதிருக்குமென்றெண்ணி அதைப்பல்லினால் கடித்துக

கடித்துச் சவுரியிற் சிறிது பாகம் எடுத்துவிட்டான். ஆயினும் அவனுடைய பல்லில் இரத்தம் வந்துவிட்டமையால் அதற்குமேல் செல்ல முடியாமல் அதில் ஒன்றுமா இருக்காதென நினைத்து அதை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுச் சென்றான். அதேவழியில் மூன்றாவதாகச் சென்ற ஒருவன் அத்தேங்காயைக் கண்டு தன்பசிக்குதவக்கூடிய வஸ்துவொன்று அதனுள் இருக்கலாமென்று கருதி தன் பல்லினாலும் கையினாலும் வேலை செய்து மீதியிருந்த சவுரியையும் எடுத்துவிட்டான். சவுரியை யெடுத்துவிட்டுப் பார்த்தபொழுது அங்குச்சிரட்டையைக் கண்டான். கண்டதும் "ஆ! ஆ! மோசம்போனேனே இதற்காக எவ்வளவு பிரயாசைப்பட்டோம். இது கல்போலிருக்கிறதே. இதனால் என்ன உபயோகம்?" என்று நினைத்து அவனும அதை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுப் போயினன். நான்காவதாக அவ்வழியே அரிவாள்கொண்டுசென்ற ஒருவன் அத்தேங்காயைக்கண்டு அதை அரிவாளினாலுடைத்து உள்ளிருக்கும் பருப்பைத் தின்று திருப்தியடைந்தான். இதுபோன்று மனித ஜென்மமாகிற மார்க்கத்திற் செல்லும் சிற்சிலர் சச்சிதானந்தமாகின்ற கடவுளின் சொரூபத்தை மூடியிருக்கும் நாமரூபத்தைப் பிரித்தெடுக்கச் சிறிது சிறிது முயன்று அம்மட்டில் நின்று விடுகிறார்கள். ஞானசாதனம் கொண்டுசெல்லும் ஒருவனே அச்சாதனத்தினால் நாமரூபத்தைத் தள்ளி, கடவுளையடைகின்றான்.

ஓர் அரசனைக்கண்டு வெகுமதி பெறும்பொருட்டு இரண்டு சங்கீத வித்வான்கள் சென்றார்கள். அவ்விரண்டுபேரும் இராஜனிடத்திற்சென்று தனித்தனியே பாடினார்கள். அரசன் அவ்விருவர்களுடைய சங்கீதத்தையும் கேட்டு மிகுந்த சந்தோஷத்தை யடைந்தவனாய் அவர்களில் ஒருவித்வானை நோக்கி "நாம மிகுந்த சந்தோஷமடைந்தோம். நீர் என்ன கேட்டாலும் கொடுக்கிறோம். உமக்கு வேண்டியதென்ன? சொல்லும்" என்றான். அதுகேட்டு வித்வானும் களிப்படைந்து "மகாராஜாவே! அடியேன் மிகவும் ஏழை; 10,000 ரூபாய் இருக்குமானால் சுகமாய்க்காலக்ஷேபம் செய்யலாமென்று நினைக்கிறேன்" என்றுசொல்லிமுடியுமுன் அரசன் தன் வேலைக்காரனை யழைத்து அவனுக்கு 10,000 ரூபாய் கொடுக்கும்படி உத்திரவு செய்துவிட்டு, இரண்டாவது வித்வானை நோக்கி "உமக்கு வேண்டியதென்ன?" என்று கேட்டான். அவனும் மிக ஏழையாயிருந்தபோதிலும் விவேகியானதால் அவன் அரசனை நோக்கி "மகாராஜாவே! எனக்கு யாதொன்றும் வேண்டியதில்லை. மகாராஜாவினுடைய பிரேமை

தான் வேண்டும்" என்று சொன்னான். அரசன் கேட்டு "இவனுக்கு அந்தத்தொகை போராதுபோலிருக்கின்றது" என்று நினைத்து 15,000 ரூபாய் கொடுக்கும்படி உத்திரவு செய்தான். வித்வான் "எனக்கு வேண்டுவதில்லை. மகாராஜாவினுடைய கிருபைதான் வேண்டும்" என்றான். அரசன் "20,000 ரூபாய் கொடுக்கட்டும்" என்றான். வித்வான் "எனக்குப் பணம் வேண்டவே வேண்டாம். மகாராஜாவின் கிருபைதான் வேண்டும்" என்றான். இவ்விதமாக அரசன் பாதி இராஜ்ஜியம்வரை கொடுக்கும்படி உத்திரவு செய்தும் வித்வான் மறுதலித்துவிட்டான். அரசன் நினைத்து "இவன் ஒன்றும வேண்டாமென்று சொல்லுகிறானே; இவனை நாம் எவ்விதத்தில் சந்தோஷப்படுத்துகிறது" என்று தனக்குள்ளேயே ஆலோசித்து முடிவில் ஒருவிதமாய்த் தீர்மானித்துக்கொண்டு வித்வானை நோக்கி "நீர் அரண்மனையில் தானே இரும்" என்று சொல்லி மற்றொரு வித்வானை விடைகொடுத்தனுப்பிவிட்டான். பின்னர் அரசன் அவ்வித்வானுக்குப் பிரத்தியேகமாய் அரண்மனை ஒன்று கட்டுவித்து அவனுக்கு வேண்டிய காரியங்களையெல்லாம் ஏற்பாடுசெய்து தன்னைப்போல் அவனையும் பார்த்துவந்தான். அதுபோல, கடவுளானவர் தம்மை வழிபடுவோர்கள் ஏதேனும் ஒன்றைவிரும்பிக்கேட்டால் அதைக் கொடுத்துவிடுகிறார். வாங்கினவன் ஏமாந்தவனாகிறான். அதனால் விவேகிகள் கடவுளிடத்தில் சத்தல்லா உலகப்பொருள்களில் ஏதேனும் வேண்டுமென்று அபேக்ஷிக்கிறதில்லை; அவராகவே கொடுத்தாலும் வேண்டாமென்கிறார்கள். அவ்விதமாக நிராசையோடு அவரை வழிபடவே அவர்மிகுந்த சந்தோஷமடைந்து அவர்களுக்கு நித்தியசுகத்தை அளித்து அவர்களைத் தாமேயாக்கிக்கொள்ளுகின்றார்.

புச்சம் (வால்) இல்லாவிடில் பக்ஷிகள் எங்ஙனம் ஆகாயத்தில் அதிக உயரமாய்ப் பறக்கமுடியாதோ அங்ஙனமே நல்ல நிலைமை இல்லா ஒருவன் இப்பூலோகத்தின் கண் அதிக உயர்வை அடையமுடியாது.

ஒரு விருக்ஷத்தின் அடியில் சேரும் ஜலம், அவ்விருக்ஷம் எத்தனை பெரிதாயிருப்பினும் அதனுடைய கிளைகள், அவைகளிலுள்ள ஒவ்வொரு இலை, பூ, பிஞ்சு, காய் முதலியவைகளில் எங்ஙனம் சென்று வியாபித்து அவைகளை யெல்லாம போஷிப்பிக்கின்றதோ அங்ஙனமே ஓர் பரோபகார சீலனுக்குவருகின்ற ஊதியத்தால் அவனைச் சார்ந்த பந்துக்கள், மித்திரர்கள், தரித்திரர்கள் முதலிய யாவரும் போஷிக்கப்படுகின்றார்கள்.

கறையான் எவ்வளவோ பிரயாசைப்பட்டுப் புற்றைக் கட்டுகின்றது. அதில் பாம்பு குடிபுகுந்து கொள்ளுகின்றது. அதுபோல, லோபிகளால் ஈட்டிவைக்கப்பட்ட பெருஞ்செல்வம் அவர்களுக்கு உபயோகப்படாமல் மற்றவர்களால் அநுபவிக்கப்படுகின்றது.

வள்ளிநாயகம்.

நான்குடியிருக்கும்வீடு.

நான் குடியிருக்கும் வீட்டை ஒருவீடென்று சொல்லவொண்ணாது; அது புராதனமானது; மிகவும் ஜீரணமாய்ப் போனது. அதற்கு மராமத்துச்செய்யவேண்டியது வெகு அவசியமாயிருக்கிறது. அப்படிக்கிருந்தும் அது நான் வசித்தவீடுகளுக்கெல்லாம் சிலாக்கியமானது. இப்போது வசித்துவரும் வீட்டில் குடிபுகுமுன் தீர்க்ககாலமாய் நான் வசித்து வந்த வீடுகளில் சிலவற்றைப்பற்றி உங்களுக்கு ஆரம்பத்தில் சொல்லுவது அவசியமாகும்,

எனக்கு ஓர் உறைவிடமும் பேரும் வேண்டுமென்பது முதல்முதல் தோன்றியபொழுது, என்வீட்டை நானே கட்டிக்கொள்ளவேண்டுமென்று நிர்மானித்தேன். நேராயும், கூரையுயர்ந்ததாயும், இடை இடையே அகலமான ஜன்னல்களையுடையதாயும் இருக்கும்படியான ஓர்வீடு எனக்கிருக்கவேண்டுமென்று நினைத்து அந்த வீட்டைப்பற்றி முதலில் ஓர் பிளான் என்மனதில் ஏற்படுத்திக்கொண்டேன்.

பின்னர் நான்வீடுகட்டத் தயாரானபொழுது, அதின் பிளானைப்பற்றிச் சிலரிடத்தில் ஆலோசிக்கக்கருதினேன். அவர்கள் என்னைவிட்டு நீக்கக்கூடாத விதத்தில் என்னோடு சம்பந்தப்பட்டவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்கள் என்னுடைய வேலைக்காரர்கள்—உண்மையில் என்னையே சார்ந்திருப்பவர்கள்—என்று பின்பு நான்அறிந்தேன். அவர்களிடம் நான் ஆலோசித்ததானது என்னுடைய அறியாமையே யென்று எனக்கு இப்போது தெரிகிறது. ஆனால் அப்பொழுது தோன்றாமற்போயிற்று; அவர்கள் ஜாஸ்தி நபர்களானதினாலும் பலாட்டியர்களானதினாலும் தங்களுக்குச் சுதந்தரம் இருப்பதாய்ச்சொல்லி என்னை நம்பும்படிசெய்து விட்டார்கள். நானும் உபத்திரவத்திற்குப் பயந்து சம்மதித்தேன்.

ஆகையால் வீட்டின் பிளானைப்பற்றி நான் ஏதும் செய்தற்கு முன்னதாகவே அவர்கள் வீடுகட்டத் தொடங்கி முடிவுசெய்துவிட்டார்கள். நான்வைக்கலாமென்று நம்பியிருந்த விசாலமான ஜன்னல்களுக்குப் போதுமான இடம் இல்லாததாய் மேற்கூரையை அதிகத்தாழ்ந்ததாயும் சரிவாயும் கட்டப்பட்டிருந்ததை நான் கண்டபொழுது ஏமாந்துபோனேன். வீடுகட்டியவர்கள் தாங்கள் விட்டிருந்த சுருக்கமான இடங்களை ஜன்னல்கள் என்று சொன்னபோதிலும் அவைகள் வெறும்பிளவுகள் என்று சொல்லும்படியாய் அவ்வளவு ஒடுக்கினவையாயும், ஒன்றையொன்று தொடும்படியாய் அவ்வளவு நெருக்கமாயுமிருந்தன.

சென்றுபோன நீடித்தகாலத்தையும், அந்த வீட்டையும், அதிலிருந்த ஆபாஸமான சிறிய ஜன்னல்களையும் நான் நினைத்தால் இப்பொழுது கூட எனக்கு க்லேசம் உண்டாகின்றது. அந்த ஜன்னல்களுக்குக் கதவுகள் இருந்தன. ஆனால் அவைகள், தங்களால் மறைக்கும்படி எதிர்பார்க்கப்பட்டிருந்த ஜன்னல்களைப்பற்றி, வெட்கமடைந்தனவாய் அவைகளை மறைத்துவைக்க முயல்வனபோல் எப்பொழுதும் அவைகளை மூடிக்கொண்டிருக்கும்.

ஆனால் கிரகம் கட்டிமுடிந்தது. நாங்களும் உள்ளே பிரவேசித்தோம். எங்கள் குடும்பத்தில் எஜமானனும் வேலைக்காரர்களுமாக ஏழு நபர்கள் இருந்தோம். ஆனால் எஜமானனானவன் தன்வீட்டுக்குப்பிளான் போடுவதிலும், அதைக்கட்டி முடிப்பதிலும் தனக்குக் கீழுள்ள வேலைக்காரர்களுக்கு அடங்கிப்போயிருந்தபடியால், தன்னைப்பின்னும் அடக்கிவைத்திருக்கவே அவர்கள் தீர்மானித்திருப்பதாய் இப்பொழுதுகண்டான். அந்தவேலைக்காரர்கள்தான் வாஸ்தவத்தில் எஜமானர்களாயிருந்தார்கள். எஜமானன் தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்கச் சக்தியற்றவனாயிருந்தான். அதனால் அவர்களுக்கு அடங்கி நடக்கும்படி நேரிட்டது.

அவன் செய்தது பெரிய மடத்தனம் என்று நானும் சம்மதிக்கிறேன். ஆனால் அவன் இருந்த ஸ்திதியை நீங்கள் அறிவீர்களானால் வேறெவ்விதமும் அவனால் செய்திருக்கமுடியாதென்று நீங்களே மனப்பூர்த்தியாய் ஒப்புக்கொள்வீர்கள். அவன் முடிவில் புதிய வீட்டில் குடியிருப்பதாகத் தீர்மானித்தபொழுது தான் வேலைக்காரர்களோடு சமமாய் வசிக்கவேண்டியதாயிருக்குமென்று அறிந்தான். ஏனென்றால் அவனுக்கென்று பிரத்தியேகமாக சேர்த்தியான அறையொன்றும் இல்லாதிருந்தது. கூரையானது மிகவும் சரிந்திருந்ததினால் அம்மாதிரியான ஓர்

அறைவைக்க முடியாமற் போயிற்று. அவன் உத்தேசித்ததுபோல் ஓர் அறை கட்டப்பட்டிருந்தாலும் அதற்கு வெளிச்சம் கொடுப்பதற்கு ஜன்னல்கள் உபயோகமில்லாமல் இருந்தன. ஆகையால் அவன் உள்ளதிற்குள் சுகமாய் வசிக்கத் தீர்மானித்துக்கொண்டான். வாஸ்தவத்தில் அவன் வசித்தது உள்ளேயேதானிருந்தது. ஏனெனில் அந்தவீடு அவனுடைய ஆவசியகங்களையும் சுதந்தரத்தையும் கருதாது கட்டப்பட்டு ஏறக்குறைய அதன் முழுப்பாகமும் பூமிக்குள்ளேயே அமிழ்ந்திருந்தது.

அவன் சிநேகவாஞ்சையுடையவனும் தோழர் கூட்டத்தில் விருப்பமுற்றவனுமிருந்தான். அவனுடைய வேலைக்காரர்கள் உற்சாகமும் குதூகலமும் உடையவர்களாயிருந்ததினால் அவர்களுடைய கூட்டத்தில் தனக்குவேறே நல்லவீடு ஒன்று வேண்டுமென்ற எண்ணத்தை அவன் மறந்துவிட்டான். அவர்கள் அவன்பேரில் அதிகாரம் செலுத்தி அதை நிலைநிறுத்தி வந்தார்கள். அவர்களுக்கு இஷ்டமான இடங்களுக்கெல்லாம் அவனை இழுத்துக்கொண்டு போனார்கள். அவர்களுக்கோ ஒரு மடமையை விட்டு மற்றோர் மடமையைப்பற்றுவதிலும் ஒரு துஷ்கிருத்தியத்தைவிட்டு மற்றோர் துஷ்கிருத்தியத்தைச்செய்வதிலும் இஷ்டமிருந்தது. அவன் சில சமயங்களில்மாத்திரமல்ல பல சமயங்களிலும் ஆழ்ந்து ஆலோசிப்பான். அப்பொழுது இவ்விதமாக அவர்கள் பின்னேதான் செல்வது மிகவும் மூடத்தனம் என்பதும் இனியேனும் அவர்களைவிட்டு நீங்கி மேன்மையோடும் நல்லொழுக்கத்தோடும் வாழவேண்டியது அவசியம் என்பதும் அவன் மனதில்தோன்றும்.

அவன் அடக்கி யாளவேண்டியவர்களாயிருந்த அவர்களைவிட்டுப் போவதற்கு வேறேதொரிடமும் இல்லையென்று அவன் பின்பு அறிந்தான். அவன் மிகவும் துக்காக்கிராந்தனாய் "ஐயோ, என்னுடைய வீட்டை நல்லமாதிரியில் கட்டவேண்டிய விதம் எனக்குத் தெரிந்திருக்க, இந்த அற்பர்கள் என்பேரில் அதிகாரம் செலுத்தும்படி அவ்வளவு பலஹீனனாய் இருந்துவிட்டேனே. என் உத்தேசப்படி மாத்திரம் அந்த வீட்டைக்கட்டியிருந்திருப்பேனானால், நல்ல வெளிச்சம்வரத்தக்க ஓர் நேர்த்தியான மேல்வீட்டை உடைத்தாயிருக்கிருப்பேன். அதில் சில சமயங்களில் தனித்துச் சுகமாயிருக்கலாமே" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொள்வான்.

பின்பும் அவன் அந்த அற்பர்களுடைய கைவசப்பட்டு, தன்னுடைய மேலான எண்ணங்களிலிருந்து தவறி, மனிஷத்தன்மைக்கடுக்காத பற்பல விஷயங்களில் திரும்பவும் அவர்களோடு செல்லுவான். கடைசியாய் அந்த வீடானது ஜீரணிக்க ஆரம்பித்துவிட்டது. அப்போது வீட்டில்

உள்ளவர்கள் எல்லாரும் அந்த வீடு வசிக்க யோக்கியமில்லாமல்போய் விட்டதென்றுகண்டு திடுக்கிட்டு வெளியேறினார்கள். அந்த வீடு சீக்கிரம் பூமியில் அமிழ்ந்துவிட்டது. அது ஏறக்குறைய பூமிக்குள்ளாகவே கட்டப்பட்டிருந்தபடியால் அவ்வளவு சீக்கிரத்தில் கெட்டுப்போனது ஆச்சரியமல்ல.

இவ்விதமாக, மறுபடியும் வீடும் பேரும் இல்லாதவனானேன். என்னோடுகூட வசித்திருந்த ஆறுபேர்களும் என்னைத் தனியே விட்டுவிட்டதாக அறிந்தேன். நான் வாழ்ந்த வாழ்க்கையில் அலுப்பும் வெட்கமும் உண்டாகி இனிமேல் வீடுகட்டுகிறதில்லையென்று தீர்மானித்துக்கொண்டேன். "நான் நினைக்கிறதுபோலேயோ கட்டமுடியாது. அப்படியிருக்க நான் வீடுகட்ட ஏன் பிரயாசைப்படவேண்டும்? ஒரு நேரான உயர்ந்த கூரையும் நல்லவிசாலமான சன்னல்களும் மாத்திரம் இருந்திருக்குமானால் மேன்மையாயும் பரிசுத்தமாயும் வாழ்ந்திருப்பேனென்று நம்புகிறேன். எனக்கு கீழானவர்கள் என்று நான் அறிந்திருந்த பேர்களுக்கு நான் கைவசப்படாமல் போயிருப்பேனானால் சங்கதி வேறாயிருந்திருக்கும் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. ஆனால் அந்த அறுவர்களோடும் போராடவேண்டியிருக்குமானாலும் நான் அவ்விதமான வீட்டை எவ்விதம் கட்டுவேனென்பது எனக்குத்தெரியவில்லை" என்று இவ்விதமாய் ஆலோசித்துக்கொண்டே நான் நித்திரைபோய்விட்டேன். எவ்வளவுகாலம் நித்திரைசெய்தேன் என்பது எனக்குத்தெரியவில்லை. அது சில நிமிஷங்களாகத் தோன்றிற்று. ஆனால் அது நீடித்தகாலமென்று இப்போது அறிகிறேன்.

நீங்கள் நம்புவீர்களோ நம்பமாட்டீர்களோ; நான் விழித்ததும் எனக்கு முதலில் தோன்றிய எண்ணம் ஒருவீடு கட்டவேண்டுமென்பதே. என்ன ஆச்சரியம்! அடுத்த நிமிஷமே உயர்ந்த கூரையைப்பற்றியும் விசாலமான ஜன்னல்களைப்பற்றியும் எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. அந்தச் சமயத்தில் ஐயோ! பாருங்கள்! என்னுடைய பழைய ஆறு தோழர்களும் வந்துவிட்டார்கள். என்னைப்போலவே அவர்களும் ஒரு வீடுகட்டிக் குடியிருக்க ஆவல் உள்ளவர்களாயிருந்தார்கள்.

(இன்னும் வரும்)

சண்முகம்பிள்ளை.

(இராமகிருஷ்ண பரமஹம்சருடைய)
உபதேசமொழிகள்.

மனிதனைத்தலையணைக்கு ஒப்பாகச்சொல்லலாம். ஓர் தலையணையின் நிறம் சிவப்பாயும், மற்றொன்றின் நிறம் நீலமாயும், பின்னொன்றின் நிறம் கருப்பாயுமிருக்கலாம்; ஆனால் இவை எல்லாவற்றுள்ளும் இருப்பது பஞ்சு ஒன்றுதான். அதுபோல் மனிதர்களிலும் ஒருவன் அழகுள்ளவனும், மற்றொருவன் கருப்பாயும், இன்னொருவன் பரிசுத்தனும், வேறொருவன் துன்மார்க்கனுமிருக்கலாம்; ஆனால் இவர்கள் எல்லாரிடத்தும் வசிப்பவர் கடவுள் ஒருவரே.

சர்வ ஜலமும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதாயினும் ஒவ்வொரு வகை ஜலமும் சாப்பிடுகிறதற்கு உபயோகப்படமாட்டாது. அதேமாதிரியாக சர்வவல்லமையுள்ள கடவுளானவர் சகல இடங்களிலும் வசிக்கிறாரென்பது உண்மையாயினும் ஒவ்வோரிடமும் மனிதனால் தரிசிக்கத்தக்கதன்று. சிலவகைத் தண்ணீரை நமது பாதங்களைச் சுத்திசெய்வதற்கும், சிலவகைத்தண்ணீரை ஸ்நானாதிகளுக்கும், சிலவகைத் தண்ணீரைச் சாப்பிடுகிறதற்கும் நாம் உபயோகப்படுத்தலாம்; மற்றும் சிலவகைத் தண்ணீரை நாம் தொடவேகூடாது. இதேமாதிரியாகப் பலவிதமான இடங்களுமிருக்கின்றன. சில இடங்களுக்குச் சமீபமாய் நாம் போகலாம்; சில இடங்களில் உள்ளேயும் பிரவேசிக்கலாம்: மற்றும் சில இடங்களைத் தூரத்திலிருந்தே நீக்கிவிடவேண்டும்.

தண்ணீருடன் பாலைச்சேர்க்க ஆரம்பித்தால் அவை இரண்டும் ஒன்றோடொன்று தயாராய்ச் சேர்ந்துகொள்ளுகின்றன; ஆனால் பாலை வெண்ணெயாக மாற்றினபோது அது தண்ணீருடன் சேராமல் அதன் பேரில் மிதக்கிறது. இதுபோல் ஜீவனானவன் ஓர்போது கடவுட் தன்மையை அடைவானாகில் பிற்பாடு அவன் சதா இடைவிடாமல் தூயகுணமற்ற மாந்தர்களுடைய சேர்க்கையிலிருப்பினும் அவர்களுடைய சாவகாசத்தினால் கிஞ்சிற்றும் அவன் பாதிக்கப்படான்.

இரவில் வானத்தில் அனந்தம் நட்சத்திரங்களைப் பார்க்கலாம்; ஆனால் அவைகளைச்சூரிய உதயத்தில் காணமுடியாது; அதனால் பகலில் வானத்தில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லலாமா? சொல்லக்

கூடாது. அதுபோல் நாம் அஞ்ஞானிகளாயிருக்கும் காரணத்தினாலே கடவுளைத்தரிசிக்கவில்லை யானாலும் கடவுள் இல்லை என்று சொல்லலாமா? சொல்லவேகூடாது.

கடவுள் ஒருவர்தான்; அவர் பலவிதமாய்த் தோன்றுகிறார். ஒரே மீனைப்பலவிதமாய்ச் சமையல் செய்தாலும் மீன் ஒன்றுதான். அம்மாதிரியாகப்பலரூபங்களிலும் ஒரே கடவுளைத் தரிசித்துப் பக்தர்கள் பரமானந்தமடைகிறார்கள்.

எண்ணெயின்றி விளக்கெரியாததுபோல பகவானின்றி மனிதன் ஜீவிக்கமுடியாது.

R N. சுப்பிரமணியபிள்ளை.

ஆத்மபுவனம்.

அந்தரங்க சக்தி.

(தொடர்ச்சி)

அபினியி லொருதாத்து மருந்து, ஒரு மாத்திரை அல்லது ஒரு மூலிகை என்றிவற்றுனெல்லாம் பிரஞ்ஞையை மாற்றித் தேக சங்கடத்தை நிவர்த்திக்கலாம், ஆனால், இம்மருந்துகள் மனிதனைப் பௌதிக மண்டலத்திலேயே அதாவது ஒருபிண்ட வஸ்துவாயே யிருக்குமாறு செய்கின்றன ஆதலால், இவை மனிதனுடைய கௌரவத்திற்கு ஏற்றனவல்ல. அவனிடத்தில் இதனைவிட உயர்ந்ததும் மேம்பட்டதுமாய தொரு தன்மையுண்டு; ஆதலால், துன்பம் அறியாமை அசாத்மசோக்கம் என்பவற்றை அடக்கியாளவேண்டுமேயன்றி அவற்றால் ஆளப்படுதல் இவனுக்கு அழகன்று. இந்தப்பெயர்மாத்திரமேயுடைய (போலி) "உபாயங்கள்" எல்லாம் பயன்படாதொழியும். இவற்றில் அதிக நம்பிக்கையுடையவர்களுங்கூட எந்த மருந்தாயினும் ஒரு அற்ப அதாவது குறையுமுந்த கால அளவைக்குமேற்பட்டுப் பயன்படும் என்று சொல்லத்துணிகின்றார்களில்லை. ஆனால், தனக்குள்ளேயே காப்புச்சக்தியை யறிந்துவைத்தவன் அந்த சக்தி தன்னைவிட்டு நீங்காதிருத்தலைக் காண்பன். அவனும் அதைவிட்டு நீங்குகிறதில்லை. ஏனெனில், வாழ்க்கைவிதியாயிருக்கும் இந்த சக்தியை யுரிமைபாராட்டிப் பிரயோகிப்பதனால் அது நாளும் இவன் அறிவில் அதிக பலத்தோடு வளர்ந்துவருகின்றது. இன்னும், "விழுமியசூழ்ச்சி"யை விசுவாசத்தோடும் அதிகரிக்கும் சித்த சமாதானத்தோடும் அந

சரித்துத் தமது ஈருவிசாரணைகளுக்குச் சுகத்தையும் பலத்தையும் பெற்றுக் கொண்டிருக்கின்ற அநேகர் இதற்குச் சாக்ஷியாயமர்ந்திருக்கின்றனர்.

ஆரம்பிதுதான்.. உண்மையில், ஞானம் சமயம் நல்லொழுக்கம் என்னும் மூன்றிற்கும் மனிதன் உரிய பொருளாயிருக்கின்றான். அவன் உயர்ந்த அறிவோடு கலந்து நிற்கின்றானேயன்றிச் சடமாயும் சீரழிந்ததாயும் மிருகத்துக்கொத்ததாயுமுள்ள சுபாவத்தோடு பட்டவனல்லன் என்பதே எனது தாத்பரியம். ஆனால், தான் இவ்வளவு கெட்டவனென்றெண்ணி எதுவரை திருப்தியடைந்துகொண்டிருக்கின்றானோ, அதுவரைத் தீய சுபாவம் இவனிடத்திற் றிளைக்கிறதற்கும் அதனை யிவன் பொருட்படுத்துகிறதற்கும் சந்தேசமில்லை.

குட்டியாயிருக்கும்பொழுது ஆடுகளோடு சேர்க்கப்பட்டு அது காரணம்பற்றி ஆட்டுக்குணங்களோடு வளர்ந்த ஒரு சிங்கம், புல்லுத்தின்னுங் குணங்களிலும் பழகுகிறது. ஆனால், தன்னுடைய சொந்த சுபாவத்தையும் சக்தியையும் அறிந்தவுடனே, அது ஆட்டுக் கூட்டத்தின்மேற் பாய்ந்து, அறியாமையில் தன்னை யிதுகாறு மடக்கிவைத்திருந்தவர்களுடைய உயிரைக் கவர்கின்றது.

துன்மார்க்கத்தைச் சார்ந்ததும் சீரழிந்ததுமான சுபாவத்தைப்பற்றிய பாவனையோடு ஒருவன் தன் எண்ணங்களைப் பொருத்துவானாயின், அவன் உண்மையில் தனக்குரிய—விடச்சொல்லின் தானேயாயிருக்கிற—மேலான பரிசுத்தத்தன்மையைச் சம்பர்கித்தவரையில் ஒளி மழுங்கி, அதனை வெளிப்படுத்தி யுபயோகிக்க வலியற்றுப்போகின்றான்.

மெய்யியல்பையும் மெய்வாழ்வையும் சிறிது அனுகப்பெற்றாரில் அநேகர் அதனால் துன்பத்தினின்றும் நீங்குகின்றனர். ஆனால் மெய்ந்நெறிப்பயிற்சியில் அழுந்தாது அவ்வக்காலத்துண்டாகும் தேகவியாதி சாந்தியால் மட்டுமே திருப்தியடைவாராகளாயின், மற்றைப்படி பெறக்கூடிய மதிக்கவொண்ணாப் பொக்கிஷத்தைநோக்க ஏகதேசமென்று சொல்லத்தக்க சிறுநன்மையே விளைவதாகும்.

குருவாயும் வைத்தியனாயும் மதிக்கப்படும் மகா புருஷனது தொழிலெல்லாம துன்பத்தை நீக்கிச் சரீர வியாதியைச் சொஸ்தப்படுத்துவது மட்டுமேயாமாயின், அது சிறுமையுடைத்தென்று எள்ளப்படுந் தன்மையதாம். ஆனால், அவனது தொழில் அங்கு நிற்பதில்லை, துன்பம் தரித்திரம் வியாதி யென்பவற்றின் காரணங்கள்வரைப்போய் எட்டி அவற்றின் மூலங்களை நாசஞ்செய்கின்றது.

“மரத்தின் மூலத்தில் வைத்தகோடாலியை
யுடையவ னிவனன்றே”.

ஒருவன் தன்னுடைய சிந்தையில் சினத்தையும் துவேஷத்தையும் வைத்துக்கொண்டு சுகபூரணனாயிருத்தல் அசாத்தியம். நிலைகளையாவது ஜனங்களையாவது குறைகூறப்படாது. தனக்கெனவாழப்படாது. பயத்திற்கு ஆட்பட்டிருத்தல் ஆகாது. பிறர் எவ்விதமாகக் கோபமூட்டினாலும் புறங்கூறப்படாது வஞ்சிக்கப்படாது. பொறாமை மாற்சரியம் கோபம் முதலியவற்றைப்பற்றிய எண்ணங்களை மனத்துட் கொள்ளப்படாது. இவைகளை நீக்கிவைக்கமாட்டாதவன் காலக்கிரமத்தில் சுகமிழந்து வருந்தவேண்டிவரும். அவ்விதக்கல்விப்பயிற்சிகளுக்குச் சிக்ஷையாகச் சுகக்கேடு தோன்றி ஒருவனை மேற்கொள்ளும்பொழுது, அவன் அதனை "ஊர் நிலை" (சீதோஷ்ணஸ்திதி) "உணவு" என்பனபோன்ற போலிக்காரணங்களின் மீதேற்றி "மாறுத" லினாலாவது அல்லது சில வெளிப்பிரயோகங்களினாலாவது நிவிர்த்திக்கத் தொடங்குவான் என்பதிற் கொஞ்சமுஞ் சந்தேகமில்லை. இதுவெல்லாம வீண் காலப்போக்கு. பவித்ரமாகிய மாறுதல் முதலில் ஆத்மாவிலும் எண்ணங்களிலுமன்றோ உண்டாகவேண்டும். ஸத்தினுடைய உண்மையிற் பெறப்படுங்கல்வியைக் கற்று நவீனவாழ்க்கை நெறியிலொழுகத்தொடங்கிய அக்கணமே எவ்வித "ஊர் நிலை" யும் சுககரமாயிருக்கும், எவ்வித "உணவு" ம் ருசிகரமாயிருக்கும்.

பொய்ந்நினைவுகள் எவ்வளவோ காலமாக அரசு செலுத்திவருமாறு அவற்றிற்கு இடங்கொடுத்துவிட்டோமே யென்று மலைக்கவேண்டியதில்லை. ஒருவன், நெறியை யறிவேன் என்று நன்றாகச்சங்கற்பித்துக்கொண்டு மெய்ந்நினைவுகளை நினைத்தலிலும் மெய்வாழ்க்கையே வாழ்தலிலும் கண்ணாயிருப்பானாயின், அசுத்தத்தன்மையினது பழைய மூலங்களும் அவற்றின்வழி வந்த நோய்களும் வாடிவதங்க ஆரம்பிக்கின்றன. அவைகளினின்றுந் தோன்றிப் படர்ந்திருக்குங் கொடிகளோ கடைசியாக அழிந்துபோகவேண்டியனவா யிருக்கின்றன.

நம்மைச்சம்பந்தித்தவரை "ஆத்மவிஷயமான" என்பதன்பொருளின்னதென்றுணரவேண்டியது அத்தியாவசியகம். உண்மையில் நாம் அபிமானிப்பதெல்லாம் "ஆத்மவிஷயத்தைக்" குறித்துத்தான். ஆத்மவிஷயம் என்றால் என்ன? சடதத்துவத்தில் அல்லது இந்திரிய புலனத்தில் வைத்து நினைத்தல் மாத்திரையேயன்றி முற்றிலும் பற்றக்கூடாததாயும் தரிசிக்கக்கூடாததாயு மிருக்குமொன்றாம்.

திருஷ்டாந்தமாக, நாம் வாழ்வு, நன்மை, ஞானம், அறிவு, உண்மை, அன்பு, என்பவற்றை அபிமானித்து அவற்றைப்பெற ஆசைப்படுகிறோம். அவை யின்னின்ன வென்றறிந்து அவற்றைப்பெற நாளும் முயல்கின்றோமேயன்றி ஒன்றையேனும் காண்டல் சுவைத்தல் தொடுதல்கூடாதே.

அவை ஆத்மவிஷயமானவை. அதாவது சடதத்துவத்திற்கு அப்பாற்பட்டவை. இவ்வுண்மைப்பொருள்கள் உலகத்திற்கு ஆதாரமாயிருக்கின்றன. நாம அவற்றின் வெளிப்பாடுகளை இப்பூதவுலகமெங்கணும காண்கின்றோமாயினும், உருவவடிவங்களோடு அவை காணப்படுவனவல்ல. வாஸ்தவமாகவே, சடமாகக் காணப்படுவதற்கெல்லாம் மூலம் ஆத்மாவிலுள்ளது. "ஆத்மசாஸ்திரப்பிரயோகம்" என்பதனால் நாம் கருதுவதெல்லாம், நம் மாற்காணக்கூடாத வாழ்வு தெய்வபக்தி ஞானம் சுகம் எனபனபோன்ற உண்மைப்பொருள்களைப்பற்றுதற்கும், அவை முன்னையினும் அதிகமாக உலகத்தில் வெளிப்படுமாறு செய்தற்கும் வேண்டிய சாஸ்திர நுட்பங்களும் அந்நுட்பங்களை யப்பியாசிக்கும் முறையுமேயாம்.

ஒவ்வொருபொருளும் ஆத்மாவிலிருந்தே புறப்படுகின்றது. நிம்மவுள சூக்கும வஸ்து இல்லையாயின, ஒருபொருளுக்கும் புறத்தே தோன்றும் வன்மையில்லை.

ஆனால் அந்தவஸ்துவோ, அளவுகடந்தெழும் நிறைந்துவியலாய், நம்மை யழைக்கின்றார் யாவர் அவர்க்குபசரிப்பாமெனக்காத்திருக்கின்றது.

"விழுமிய சூழ்ச்சி" யினால், இந்த உண்மை வஸ்து வெளிப்பாட்டிற்கு எவ்விதஞானமும சமத்துவமும அவசியமோ அவற்றைக் கொண்டு அதனைப்பற்றுதற்கு நமக்கு அதிகாரமுண்டென்று அறிகின்றோம். அன்றியும், சுகம் சாந்தி வாழ்வென்பனவற்றை அபரிமிதமாகப் பெறுதற்கும அவற்றால் நம்வாழ்க்கையைச் சௌக்கியப்படுத்தற்கும் உலகத்தைச் சுகப்படுத்தி அழகுசெய்தற்கும் நமக்கு அதிகாரமுண்டென்றும் அறிகின்றோம்.

ஆத்மசாஸ்திரப்பிரயோகம் என்பது (நோய்) நிவிர்த்தி (சுக) விர்த்திகளுக்காக ஏற்பட்டது; எனினும், நிவிர்த்தி விர்த்திகளின் உயர்ந்தபொருளே இங்கு கவனிக்கப்படவேண்டியது. "விழுமிய சூழ்ச்சி" யை விரிவாக எடுத்துரைக்கும் நூலின் நாமமும் "நோய் நிவிர்த்திக்காகவும் ஆத்மஞானவிர்த்திக்காகவும் ஏற்பட்ட ஆத்ம சாஸ்திரப்பிரயோகம்" எனவே அமைந்தது.

அந்நூலில், இவ்விஷயங்களெல்லாம் சுருக்கமாகவும் ஆயினும் ஒன்றும்விட்டுப்போகாமல் மிகத்தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கின்றன. அதிற் காணப்படும் விதிகளும் வியவகாரங்களும் பிரயோகங்களும் தருக்க நியாயத்தினின்று அணுவும் வழுவாதனவாய் மிகத்தெளிவாகக் கூறப்பட்டமையின், அதனை ஒருமுறைபடித்தோரும் பொருளனைத்தையுங் கிரகிக்கவும், மெய்ச்சுகத்திலும் ஆனந்தத்திலும் ஒருபடி யுயருந் தன்மையால் அவற்றைப்பிரயோகித்துக் காட்டவும் வல்லவராவர், மற்று.

அந்த ஆச்சியோரது கொள்கைகளும் அபிப்பிராயங்களும் அடங்கிய புத்தகமாதலின்றி, விழுமிய சூழ்ச்சியின் கேவலத்தன்மையினையும் அதனை யுபயோகிக்கும் முறைகளையும் களங்கமின்றி, விளக்கித்தரும் சிறப்பு நூலாயிருக்கின்றது. அன்றியும், மனத்தையும் சங்கற்பத்தையும் அவை மூலமாய்ச் சரீரத்தையும், பலம் ஞானம் சுகி சௌக்கியம் என்பவற்றின் வழியே நடத்துதற்குரிய உபாயங்களையும் காட்டுகின்றது.

ஒவ்வொரு லோகாநுபவத்திலும் லௌகிகத்தொழிலிலும் விழுமிய சூழ்ச்சி பயன்படுகின்றது.

பந்தத்தினின்றும் நீங்கி வீடுபெறுதலே நீங்கள் உண்மையாகவே அபேக்ஷித்தது, விழுமிய சூழ்ச்சி விழுமிய வாழ்க்கை யென்பவற்றை யறிந்து அவற்றோடு பொருந்த ஒழுகுமாறு முயல்வீர்களாயின், உங்கள் வழியில் ஒன்றுங் குறுக்கிட்டு நில்லாது.

ஒவ்வொரு க்ஷணமும் "பொன்போல் அருமையானது", இவ்விடத்து, இப்பொழுது, இன்று என்னும் பதங்களே வாழ்க்கைக் கொடியிற் பொறிக்கப்பட்டன வென்றறிக.

[இச்சிறு நூலானது, அமெரிக்காகண்டத்துப் பிறந்து உண்மை அநுபூதியிற் சிறந்து விளங்கி யிக்காலம் ஆஸ்ட்ரேலியாவிற் றங்கியிருக்கும் மாது சிரோமணியாகிய அன்னை மில்ஸ் என்பவரால் எழுதப்பட்டது. அவர் சரித்திர முதலியன இனி விரித்துரைக்கப்படும். நூலின் பெருமையும் பயனும் எம்மாற் பேசுந்தரத்தனவல்ல.]

அனவரதவிநாயகம்பிள்ளை.

(Life of Madame Guyon.)

கூயன் அம்மாள் சரித்திரம்.

(தொடர்ச்சி)

கூயன் அம்மாளைச் சிறைச்சாலையில் போகும்படி உத்திரவுசெய்த அரசன் (St. Marie) சென்று மேரி என்ற ஒரு கன்னிகாமடத்திற்கு அவளையனுப்பி ஓர் சிறு அறையிலடைத்து, அவளுடைய குமாரத்தியையும் அவளைவிட்டுப்பிரித்து, அவள் வேலைக்காரியையும் அவளுடன் இருக்கவொட்டாமற்செய்து, மிகவும் கண்டிப்பும் கோரமுமுள்ளதோர் கன்னிகையை அவ்வம்மாளுக்குக் காவலாக நியமித்தான். கூயன் அம்மாளை யடைத்த சிறைச்சாலையோ வெயில், காற்று, மழை முதலானவை உள்ளே பிரவேசித்து அவள் சரீரத்தில் படும்படியான விதத்தில் அவ்வளவு

திறந்ததாயிருந்தது. இச்சிறைச்சாலையில் அவ்வம்மாள் தனிமையாக எட்டுமாதக்காலம் அடைபட்டிருந்தாள். இவ்விதம் அடைபட்டிருக்குங்காலையில் அவளுடைய பன்னிரண்டு வயதுள்ள அதிபாலியமான மகளை அவளுக்கிஷ்டமில்லாத ஒருபுருஷனுக்கு விவாகம் செய்துகொடுக்கச்சம்மதிக்கும்படி அவளை ரோமன் கத்தோலிக் பாதிரிமார்கள் கட்டாயம் பண்ணினார்கள். அச்சமயத்தில அவ்வம்மாளுக்கு அதிக வியாதி உண்டாயிற்று. வியாதிக்காலத்தும் வியாதிகுணமான பின்பும் அவளுடைய மகளை முன் உத்தேசித்த புருஷனுக்கு விவாகம்செய்யச் சம்மதித்தால் அவளைச் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கிறதாகச் சொன்னார்கள். தன் மனதுக்கு ஒவ்வாததும் பாவமுமான காரியத்தைச்செய்து தன்னுடைய சுவாதீனத்தைப் பெறுவதைப்பார்க்கிலும் சிறைச்சாலையிலிருந்து கஷ்டமடைவதில் தனக்கு அதிக சந்தோஷமிருப்பதாகத் தெரிவித்து, சதாகாலமும் அவள் கடவுளையே சிந்தித்துப் பற்பல பாடல்களால் ஸ்துதித்துக்கொண்டிருந்தாள். அப்பாடல்களில் சிலவற்றை எனது நண்பரொருவரால் தமிழ்ச் செய்யுள்களாக்கி இங்குவரைந்திருக்கின்றேன்.

அவையாவன:—

1, அடியேன் அற்பப்பறவை அடைபட்டேன் சிறுகூட்டில்
குடியிக்குறச்செய்தோன் அருங்குணமே பாடிப்புகழ்வேன்
விடியாச்சிறையிருப்பும் மிகவிருப்பாகவேகொண்டேன்
முடியாமுதற்பொருள்தான்செய்த முடிவீதெனலாமே!.

2. யான்செய்கடன் வேறொன்றிலை யீசன்கழல் துதிப்பேன்
தேன்போற்செவிகொள்வான எந்தன் சிந்தாமணியானுன்
ஊன்கொண்டுழல்வேனைப் பிரித்துறுமென் சிறகார்த்தும்
கானஞ்செயுங் கடையேன் குரல்கேட்கமகிழ்கின்றான்.

3. என்கூடு எனைச்சூழ்ந்தது யான் ஏகவொண்ணுமல்
பின்பாரிடப் பிணிப்புற்றது தெதேபலால் நெஞ்சே!
முன்காணிட மெங்குஞ்செல முழுதுஞ்சுதந்தரமே
நமகாம் இதன் மறால் என்னன நடையைத்தடைசெயுமோ.

1688-ம் வருஷம் அக்டோபர் மாஸத்தையில் சிலருடைய வேண்டுகோளுக்காகக் கூயன அம்மாளைச் சிறைச்சாலையிலிருந்து விடுத்தார்கள். பிறகு சிறிதுகாலத்திற்குள் இவ்வம்மாளுடைய நற்குணங்களும், வல்லமையும், உண்மையான பக்தியும் பிரான்ஸ் தேசம் முழுவதும் பரவிற்று. அப்போது (Cambray) கேம்பிரே பாதிரியாகிய (Fenelon) பெனிலன் என்ற ஒரு பெரியவர் இவளுக்குச் சிஷியனானார். இவளுடைய கொள்கை

களும், கீர்த்தியும் பரவப்பரவ ரோமன்கத்தோலிக் மார்க்கத்தாருக்கு விரோதம் அதிகரித்து (Rome) ரோமாநகரத்திலிருந்த அவர்களுடையதலைவராகிய போப்பினிடத்தில் தெரிவிக்க அவர் பெனிலன் பாதிரியை வேலையைவிட்டு நீக்கி, கூயன் அம்மாளை மறுபடியும் அவள் வேலைக்காரியுடன் பற்பல சிறைச்சாலைகளில் அடைத்தார். சிறைச்சாலையானது பலமான கல்சுவர்களால் கட்டப்பட்டிருந்தபோதிலும் கடவுளின் வியாபகத்தைத் தடுக்கும்சக்தி அதற்கில்லையென்றும் கடவுள் அங்கும் வாசஞ்செய்கிறதினால் சிறைச்சாலைகூட தனக்கு அதிக ஆனந்தமுண்டுபண்ணும் இடமாய்த்தானிருக்கிறதென்றும் சொல்லி, கூயன் அம்மாள் தனது பணிப்பெண்ணுடன் பக்தியான பாடல்களைப்பாடி சதாகாலமும் கடவுளைப்பஜித்துவந்தாள். பின்னால் அவ்வம்மாளை 1698-ம் வரு செப்டெம்பர் மீ (Bastile) பாஸ்டைல் என்ற ஒரு பேர்பெற்ற சிறைச்சாலைக்கு அனுப்பினார்கள். அந்தச் சிறைச்சாலை அநேக இருட்டறைகளை உடையதாயிருந்தது. அதன் சுவர்கள் பன்னிரண்டு அடி கனமுள்ளது. அச்சிறைச்சாலையில் காற்றென்பதும் வெளிச்சம் என்பதும் சஞ்சரித்ததேயில்லை. ஒருவேளைச்சிறைச்சாலையிலிருந்து விடப்பட்டாலும் அங்கேபார்த்த அல்லது கேட்ட ரகசியத்தை வெளியிடக்கூடாதென்று ஒவ்வொரு கைதியையும் சத்தியம் வாங்குவது வழக்கம். கொலை, களவு, காமம், இராஜத்துரோக முதலிய மகா பாதகங்களைச் செய்தகுற்றவாளிகளுக்கென்று ஏற்படுத்தப்பட்ட இப்பயங்கரமான சிறைச்சாலையில் கூயன் அம்மாளை மதவிஷயத்தில் அபிப்பிராயபேதத்திற்காக நாலுவருஷகாலம் தனிமையாக அவளுடைய இஷ்டர்களைப் பார்க்கவொட்டாமலும் அவர்களுக்கு எழுதவொட்டாமலும் கடுங்காவலில் வைத்தது எவ்வளவு அநீதம்! கூயன் அம்மாளோ கடவுள்பேரிலிருந்த பக்தியினால் அவ்வளவு கஷ்டங்களையும் சந்தோஷமாகவே பொறுத்துக்கொண்டாள். 1702-ம் வரு அவள் சிறைச்சாலையினின்றும் விடுக்கப்பட்டு, பாரீஸ்நகரத்துக்கு 100 மைலுக்குத்தென்மேற்காயுள்ள (Blois) பிளாய்ஸ் என்ற இடத்துக்குத்துரத்தப்பட்டாள். கூயன் அம்மாள் இப்பொழுது 54-வயதுடையவளாயிருந்தபோதிலும் அவளை இடைவிடாத் துன்பங்களுக்காளாக்கினமையால் அவள் அதிக விருத்தாப்பியமானவள்போல் தோன்றினாள். இந்தச் சமயத்தில அவள் எழுதிவந்த தன்னுடைய சரித்திரத்தையும்பூர்த்திபண்ணினாள். நன்மையென்பது கடவுளிடத்திலிருப்பதைத்தவிர தன்னிடமிருப்பதாக ஐவங்கள் எண்ணுவது பிசகென்றும், ஒருவனுக்குத் துன்பம் அதிகரிப்பதினால் கடவுளை அதிகமாய் விசுவசிப்பது திண்ணமாகையால் அவ்வித கஷ்டங்களை அனுபவிப்பது தனக்குமிருந்த சந்தோஷமென்றும் கூயன்

அம்மாள் சொல்லிக்கொண்டேயிருப்பாள். இவ்விதமாக எக்காலத்தும் கடவுளைவிட்டு நீங்காதமனதையுடைய பக்தசிரோன்மணியாகிய கூயன் அம்மாள் 1717-ம் வருஷம் ஜூன் மாதம் 9-ம் தெய்தி தேகவியோகமானாள்.'

நண்பர்களே! இப்போது கடவுளினிடத்தில் அன்பு செலுத்தினதற்குப் பயன் இதுதானாவென்று நினைக்கிறீர்களோ? அவ்விதம் நினையாதீர்கள்.

"சுடச்சுடப் பொன்போலொளி விடுந்துன்பம்
சுடச்சுட நோக்கிற்பவர்க்கு."

என்று திருவள்ளுவநாயனார் அருளிச்செய்திருக்கின்றதுபோல துன்பத்தில் வருந்துவதால் பக்தர்கள் பரிசுத்தமடைகிறார்களே தவிர வேறென்ன? பார்க்கிறவர்களுக்குச் சகிக்கமுடியாததாயிருக்கிறதே தவிர, பக்தர்களுக்குத் துன்பம் யாரால் உண்டுபண்ணக்கூடும்? அவர்கள் கடவுளைவிட்டிருந்தாலல்லவா துன்பம் அவர்களை அணுகப்போகின்றது. கடவுளிடத்திலும் துன்பமுண்டோ? இல்லை. ஆதலால் கூயன் அம்மாள் எதார்த்தத்தில் துன்பமே அனுபவித்ததில்லையானாலும் அவளை இவ்விதமெல்லாம் செய்தது அதற்குக்காரணமாயிருந்தவர்களுடைய மனதின் கடினத்தைக் காண்பிக்கின்றது. மதசம்பந்தமான விஷயத்தில் அபிப்பிராய பேதத்திற்காக என்ன கொடுமைசெய்தார்கள் பார்த்தீர்களா? இவ்விதம் பிரான்ஸ் தேசத்தில் மாத்திரம் நடந்திருக்கிறதென்று எண்ணுதீர்கள். இத்தாலி (Italy) தேசத்திலும் இவ்விஷயத்திற்காகவே (Giordano Bruno) ஜியார்டானோ புருனோ என்பவரை அக்கினியில் எறிந்துவிட்டார்கள். இவ்விதமாக அநேக தேசங்களிலும் நடந்திருக்கின்றது. மற்றதெல்லாம் பார்ப்பானேன்? நமது தேசத்தில் எத்தனை க்ஷமணர்கள் மாண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள். என்ன அநியாயம்? மதசம்பந்தமான அபிப்பிராயபேதத்திற்காக இத்தனையும் வேண்டுமா?

"சமயகோடிகளெல்லாம் தந்தெய்வமென்தெய்வ மென்றெங்
கும் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றது."

என்று தாயுமான சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். எதார்த்தத்தில் கடவுளானவர் பல சமயங்களுக்கும் ஒருவராகவேயிருக்க, அவர் பெயரைவைத்துச் சண்டைசெய்வதும், ஒருவரையொருவர் வருத்துவதும் அழகாமா? ஆகாது! ஆகாது! ஆகையினால் நாமெல்லோரும் பல சமயிகளாயிருந்தபோதிலும் கடவுள் ஒருவரே என்ற நிச்சயமுடையவராய் அவரிடத்தில் அன்புசெலுத்தி அவருடைய பாதாரவிந்தங்களையடைய முயலுவதுடன் அன்னியமதத்தைத் தழுவினரை நமது சகோதரருக்கும் நம்மால் இயன்ற உதவிசெய்து ஒரு குடும்பத்தாரைப்போல் சமாதானமாயும் சுகமாயும் வாழ்வோமாக,

S. வேதமூர்த்தி முதலியார், B. A.

ஒருபதேசம்.

இந்துக்களே, மகமதியர்களே, கிறிஸ்தவர்களே, பண்டிதர்களே, மவுல்விகளே, பாதிரிகளே இன்னும் மற்றமதவாதிகளே.—வெற்றி, தோல்வி, மதிப்பு, அவமதிப்பு, சுயாபிமானம், பராபிமானம் என்பவைகளைப்பற்றியுள்ள எண்ணங்களையொழித்து இம்மொழிகளைக் கேட்டு அவற்றிலுள்ள உண்மையை சிந்திப்பீர்களாக. அதனால் உலகத்திலுள்ள நிலையுடா துன்பமும் நீங்கி அவற்றிற்குப்பதிலாகச் சாந்தியும், சுகமும், நிலைபெறும். சலனமற்ற மனதோடும் தெளிவான புத்தியோடும் எல்லாமாந்தரும் நித்தியசுகத்தை விளைவில் பயக்கத்தக்க சதகர்மங்களைச் செய்வார்களாக. சுயம்பிரகாசமாயிருக்கிற மெய்ப்பொருளாகிய கடவுளையறிந்து அன்போடும் பக்தியோடும் அவரிடத்தில் சரணடையுங்கள். அவருடைய காக்ஷியில சந்தோஷத்தைக்கொடுக்கத்தக்க கர்மங்களைச்செய்வதிலும் தவறியகர்மங்களுக்காக அவரிடத்தில் மன்னிப்புக்கேட்பதிலும் உங்களுடைய மனதை ஒன்றுபடுத்துங்கள். அவர் கிருபைக்கடலாதலின் உங்களுடைய துன்பத்தையெல்லாம் போக்கிச் சுகத்தைக்கொடுத்தருளுவார். மதவாதிகளெல்லாரும் தங்களுடைய வீண் எண்ணங்களில் நலமையென்று தோன்றுபவைகளை யொழித்து, சத்தியத்தை நாடுவார்களாயின உலகத்திலுள்ள இடுக்கணீங்கிப பரசாந்தி குடிபுகும். இதில் சந்தேகமேயில்லை.

நீங்கள் நம்பும் மதத்தைத்தழுவி மற்றவர்களுடைய மதங்களை—உண்மையென்று அறியாமல்—பரிகசிக்கின்றீர்கள். எது மெய்? எது பொய்? உலகநன்மைக்குழைகிறவர் யார்? அந்தநன்மை எவ்விதம் உணரப்படுகின்றது? என்றிவ்வித எண்ணங்களிலிருந்து உங்களுடைய மனங்களைத்திருப்பிக்கொண்டு உங்களுக்குத் தெரிந்தவார்த்தைகளை ஸ்தாபிப்பதிலும் உங்களுக்குத் தெரியாத வார்த்தைகளை நிந்திப்பதிலும் ஜாக்கிரதையாயிருக்கிறீர்கள். அசத்தாகிய சாவிகளைத்தூரவெறி சத்தாகிய மணியைசகிபித்து எல்லா நன்மையும் பயப்பவராகிய அவ்வுண்மைப்பொருளை அடையவேண்டுவதற்காக எல்லாரும் ஒன்றுபட்டு அன்போடு முயற்சிப்பது உசிதமாம்.

எது பொய்யோ அது எல்லார்க்கும் பொய்யே. பொய் பொய்யாயிருக்குமேதவிர அது ஒருபொழுதும் மெய்யாவதில்லை. அசத்தான பொய்யிலிருந்து ஒரு நன்மையுந்தோன்றமாட்டாது. சத்தியம் ஒன்றே. இரண்டாவது சத்தியம் இருக்கமுடியாது. மெய் ஒருபொழுதும் பொய்யாவதில்லை. ஆனால் எப்பொழுதும் யாவர்க்கும் மெய்யாகவே யிருக்கின்றது. கடவுளென்று சொல்லப்படுகிறதும் சுயம்பிரகாசமாயிருக்கிறதுமான உண்

மைப்பொருளானது தன்னுடைய சங்கற்பத்தினாலேயே காணப்படுபொருளாயும், காணப்படாப்பொருளாயும், காரணமாயும், சூட்சமமாய் அல்லது சத்தியாயும், ஸ்தூலமாய அல்லது ஜடப்பொருளாயும், அநேக நாமரூபங்களையுடையதாயும், அகண்டமாயும், பகுக்கக்கூடாததாயும் வியாபித்ததாயுமிருக்கிறது. எல்லாமதவாதிகளும நன்றாய்க் கவனிப்பீர்களாக. "நீங்கள் பிரசங்கிக்கும் மதம்யாது? நீங்கள் வழிபடும் கடவுள் யாவர்?" என்று சொல்லுங்கள். ஒருமதம பொய்யாயிருக்கும் பக்ஷத்தில் எல்லாமதங்களும் அப்படியேயிருக்கவேண்டும். ஏனெனில் ஒரு மதத்தை ஸ்தாபிப்பதற்கு மற்றமதங்களுக்கும் ஆதாரமாய்ச் சொல்லக்கூடிய காரணங்களைத் தவிர் வேறு காரணங்கள் ஒன்றுமில்லை. எல்லாமதங்களும் பொய்யாய்ப் போகும்பக்ஷத்தில், பொய்யாயிருப்பதில் எல்லாம் ஒன்றுதானே. எது பொய்யாயிருக்கிறதோ அது பொருளல்ல. எது எதார்த்தத்திலுள்ளதோ அது பொய்யாகாது. எதார்த்தத்திலுள்ள வழியும் ஒருவனுக்குப் பொய்யாகததோன்றலாம். உண்மைப்பொருளானது மனதினால் எவ்விதமாய்ப் பாவிக்கப்படுகின்றதோ அவ்விதமாகத் தோன்றுகின்றது. பொய்யானது தோற்றமாத்திரமாயும் நினைப்புமாத்திரமாயுமிருக்கின்றது. இவ்விதமாக நீங்கள் விசுவாசிக்கும் மதமும—சகல நன்மைகளையுங் கொடுக்கும்—கடவுளும்சத்தியப்பொருளாயிருக்கும் பக்ஷததில் பேதத்திற்குவகையேது? ஆகையால் வெறுப்பு, சண்டை, சச்சரவு இவைகளை விட்டொழியுங்கள். அவைகளுக்குக் காரணம் காரணமற்றநினைப்பாயிருக்கிறது. இன்னும் நன்றாய்க் கவனியுங்கள். ரூபமற்றதாயிருப்பினும் எந்தவஸ்து பிரபஞ்சமாகிய அளவிறந்த ரூபங்களோடுகூடி ஏகமாயும் பரிபூரணமாயும் இருக்கிறதோ அந்த வஸ்துவினிடததிலிருந்தே சகல ஜீவர்களும் தோன்றி அதனாலேயே ஜீவித்து அதனிடத்திலேயே எப்போதும் நிலைபெறுகிறார்கள். பிரபஞ்சமாகத் தோன்றியிருக்கிற கடவுளே ரூபமற்றவராயும், கிரியையற்றவராயும், குணாதீதராயும், மனோவாக்குகெட்டாதவராயும், பொறிகளினால் அறியப்படாதவராயுமிருக்கிறார். ஒரு கடவுளே இரண்டு நிலைகளையுடையவராயிருக்கிறார். அவரொருவரே பிரபஞ்சமாயும் பிரபஞ்சாதீதராயுமிருக்கிறார். எல்லாமனிதர்களும் தாங்கள் தோன்றுவதற்கு மூலமாயும் ஜீவிப்பதற்கு ஆதாரமாயும முடிவில்சேரும் இடமாயுமிருக்கிற வஸ்துவே தங்களுக்குப் பிதாவாயும், மாதாவாயும், ஆதமாவாயும், குருவாயுமிருக்கிறதென்று உணரக்கடவர். அத்தகைய கடவுளை மறுதலித்துவேறுயேதேனுமொன்று உங்களுடைய அன்பையும், மதிப்பையும் வணக்கத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறதெனறு நினைப்பது மனிதத்தன்மைக்கு அநுசிதமாகும். மனிதர்களுடைய ஸ்தூல சரீரமென்ன, மனம் புத்தியென்று சொல்லப்படுகிற சூட்சுமசக்திகளென்ன இவையாவும் காணப்படு பொ

ருள்கள் அல்லது பிரபஞ்சமாகும் கடவுளின் அவயவங்களாகி, பிருதிவி அப்பு முதலிய பூதங்களிலிருந்தே உண்டாகின்றன. நீங்கள் பார்க்கிறது போல ஒவ்வொரு பொறியும் அதனதன் தொழிலைச்செய்கின்றது. ஒரே வஸ்துவே ஒவ்வொரு ஜீவித சரீரத்திலும் ஜீவாதாரமாயிருந்து சுகம் துக்கம், ஜனனம் மரணம், நித்திரை விழிப்பு முதலிய இவைகளை அறிகிறது.

எல்லாமதவாதிகளும் இவைகளுக்கு விடைபகரட்டும். எந்தப்பேதத்தை யதார்த்தமாகக்கொண்டு பற்பல மதங்களிருப்பதாக வெகுஜனம் படிக்கும் அவைகளைப் பின்தொடர்வதால் சண்டையுண்டாகும் படிக்கும் மனிதர்களுக்குப் போதிக்கின்றீர்கள்? உங்களுடைய மதத்திற்கும் அதன் நாமகரணத்திற்கும் எந்தப்பேதம் ஆதாரமாயிருக்கின்றது? ஒருவனை யவனுடைய சகோதரனிலிருந்தும் ஒரு ஜீவனை மற்றொரு ஜீவனிலிருந்தும் பிரிக்கிற வெறுப்பு, சண்டை, சச்சரவு, இவைகளுக்கு எந்தப்பேதத்தைக் காரணமாகச் சொல்லுகின்றீர்கள்? வெற்றி தோல்வி என்பவைகளைப்பற்றி யுண்டாகிற வீண எண்ணங்கள் உங்களெல்லாரையும் சஞ்சலத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாக்குகின்றது. உண்மையறியாமல் எல்லாவற்றையும் அறிவதாகச்சொல்லுகிறீர்கள். ஆனால் சற்றுநின்று ஆலோசித்துப்பாருங்கள். நீங்கள் பிறக்குமுன்னதாக எதையறிந்தீர்கள்? நீங்களிருந்ததாகவாவது, கடவுளிருந்ததாகவாவது, மதமிருந்ததாகவாவது அறிந்தீர்களா? இப்போது உங்களுக்கெதிரில் தோன்றுகிற பிரபஞ்சத்தை அப்போது பார்த்தீர்களா? உங்களுக்கு மரணம் எப்போது வருகிறதென்றும், மரணத்திற்குப்பின் நீங்கள் என்னதாவீர்களென்றும் இப்போதாவது நீங்கள் அறிகின்றீர்களா? மரணத்துக்குப்பின் ஜென்மமுண்டா, உண்டானால் அப்போது உங்களுடைய மதம் எதாயிருக்கும்?

மனிதன் பிறந்தபொழுது பாஷையைப்பற்றியோபடிப்பைப்பற்றியோ ஒன்றுமறிகின்றானில்லை. அ, ஆ, முதலிய அக்ஷரங்கள் கூடப்படிப்பதற்கு வருத்தத்தோடு வந்து, நாளடைவில் பண்டிதர், பாதிரி, மவுல்வி என்று சொல்லப்படுகிற கெம்பீரமான பட்டப்பெயர்களைப்பெற்று, ஆகாயத்திலும் பூமியிலுமுள்ள எல்லாவற்றையும் அறிவதாகச்சொல்லுகிறான். புஸ்தகங்களிலிருந்தப்பல அபிப்பிராயங்களை அறிகிறீர்களேதவிர உங்களுக்கு உண்மைகாட்சி உண்டாவதில்லை. அப்படியிருந்தும அவ்வபிப்பிராயங்களால் நடத்தப்பெற்ற உங்களுடைய அபிப்பிராயங்களே சரியென்றும் மற்றவர்களுடைய அபிப்பிராயங்கள் தப்பென்றும் கூச்சலிடுகிறீர்கள் அதிலிருந்தே மனிதர்களுக்கு இவ்வளவு துக்கமும் உற்பத்தியாகிக்கொண்டேவருகின்றது. மதவாதிகள் தங்களுடைய சர்வஜ்ஞத்துவத்தில் திருப்தியடைந்தவர்களாய் நின்றுவிடுகிறார்கள். அவர்கள் பொய்யைச்சகித்து மெய்யை நாடுகிறார்களில்லை. அதனால் அவர்கள சாந்தத்திற்கு அன்னியர்களாயிருந்துகொண்டு, மனுஷர்களை உண்மையிலிருந்தும் வேறுமுகமாய்த திருப்பிவிடுகிறார்கள். தற்காலத்தில் மனிதர்களுடைய இருதயம் வெறும்பொய்யே காரணமாக எழுகின்ற பரஸ்பரவெறுப்பினால் துன்புறுத்தப்படுகின்றது. ஆகையால சகல பிராணிகளுக்கும் துன்பமும் சஞ்சலமும்போய் அமைதியும சுகமும் உண்டாகும்பொருட்டு ஒவ்வொரு பட்டணத்திலும் கிராமத்திலுமுள்ள முதன்மையான மனுஷர்